செ.வெ.எண்:62 நாள்30.01.2020

# பத்திரிக்கை செய்தி

## தனியார் துறையில் 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கடலூர் மாவட்டத்தில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பெரும் திரளாக பங்குபெற வேண்டும் என கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திரசேகர் சாகமூரி.,இ.ஆ.ப.,அவர்கள் தகவல்

-----

கடலூர் மாவட்ட நிர்வாகம் மற்றும கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 07.02.2021 அன்று கடலூர் செயின்ட் ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மஞ்சகுப்பத்தில் காலை 9.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இம்முகாமில் 100-க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு 10,000-க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

இம்முகாமில் கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு பன்னிரெண்டாம் வகுப்பு, கலை மற்றும் அறிவியல், நர்சிங், வணிகப் பட்டதாரிகள், ஐ.டி.ஐ, டிப்ளமோ மற்றும் பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

இவ்வேலைவாய்ப்பு முகாமின் வாயிலாக தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெறும் பயனாளிகளின் வேலைவாய்ப்பக பதிவு விவரங்கள் ரத்து செய்யப்பட மாட்டாது. இம்முகாமில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள இளைஞர்கள் மற்றும் வேலைநாடுநர்கள் தமிழ்நாடு தனியார்துறை வேலைவாய்ப்பு இணையதளமான www.tnprivatejobs.tn.gov.in –ல் பதிவு செய்து கலந்து கொள்ளலாம். தங்களின் பாஸ்போாட் அளவு புகைப்படம், கல்வி சான்றிதழ்கள், ஆதார் அட்டை மற்றும் சுயவிவர குறிப்புடன் (Bio-Data) முகாமில் நேரடியாக கலந்து கொள்ளலாம்.

முகாம் தொடர்பான கூடுதல் விவரங்களை அறிய கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரிலோ அல்லது தொலைபேசி(04142-290039) வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம்.

இம்முகாமில் பணியாளர்களை தேர்வு செய்ய விரும்பும் வேலையளிப்பவர்கள் தங்களின் பணியாளர்கள் தேவை மற்றும் ஆட்கள் தேவைப்படும் முழுமையான விவரங்களை (deo.cud@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் 04142-290039 என்ற தொலைபேசி எண்ணில் தெரிவித்து முன்பதிவு செய்து வேலைவாய்ப்புத் துறையின் ஒப்புதலுடன் முகாமில் கலந்து கொண்டு பணியாளர்களை தேர்வு செய்து கொள்ளலாம்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் நடத்தப்படும் பல்வேறு இலவச திறன் பயிற்சிகளுக்கான பதிவும் இம்முகாமில் நடைபெறவுள்ளது.

எனவே கடலூர் மாவட்டத்தில் உள்ள வேலை தேடும் இளைஞர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) மற்றும் வேலையளிக்கும் தனியார் துறை நிறுவனங்கள் 07.02.2021 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் பெரும் திரளாக பங்குப் பெற்று பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இந்த சேவைக்கு கட்டணம் ஏதும் கிடையாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்.